இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் **(CEDPL)**

## வர்த்தகமானி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல் - 2022/2023

**தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் பின்வரும் பட்டப்படிப்புக்கு வெளிவாரி மாணவர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 22.11.2024 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.**

- வர்த்தகமானி (Bachelor of Commerce)

---

**ஆகக் குறைந்த தகைமைகள்**

---

01. க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் (2022 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முந்திய பரீட்சை) ஆகக்குறைந்த சித்திகளுடன் பொதுச் சாதாரணப் பரீட்சையில் (General Common Test) குறைந்தபட்சம் 30% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் / சிங்களம் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

02. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா தரம் (II) அல்லது முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா தரம் (II)

**அல்லது**

03. இலங்கை தொழிநுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய வணிக சான்றிதழ் பாடநெறி (இரண்டு வருட பாடநெறி)

**அல்லது**

04. இலங்கை தொழிநுட்ப கல்லூரியினால் வழங்கப்படும் அல்லது கல்வி அமைச்சின் மேலதிக கற்கை நிறுவனத்தினால் வழங்கப்படும் வணிகத்தில் கணக்குப் பதிவாளர்களுக்கான உயர் சான்றிதழ்.

**அல்லது**

05. கல்வி பொதுத் தராதர சாதாரண தரத்துடன் CIMA Stage – II, அல்லது Chartered (CASL) Stage – II அல்லது AAT இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

06. இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய தகைமைகள்.

**குறிப்பு:**

- கற்கை நெறி தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும். அத்துடன், இக்கற்கை நெறிக்கு குறைந்தபட்சம் 100 மாணவர்கள் ஒவ்வொரு மொழிக்கும் உள்வாங்கப்படுமிடத்து மாத்திரமே பட்டப்படிப்பானது ஆரம்பிக்கப்படும்.
- தெரிவு செய்யப்படும் முறை – நேர்முகப்பரீட்சை மற்றும் தேர்வுப்பரீட்சை.
- செலுத்தப்பட்ட கட்டணங்கள் எக்காரணங்கள் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

---

**விண்ணப்பபடிவங்கள் மற்றும் மேலதிக தகவல்களை பல்கலைக்கழக இணையத்தளமான www.seu.ac.lk ல் பெற்றுக் கொள்ள முடியும்.**

---

**பதிவாளர்**
**இலங்கை தென்கிழக்குப் பல்லைக்கழகம்**
07.10.2024